# ஸம்ஸ்க்ருதத்திற்கு சரியான ஒரு லிபியின் அவசியம்

நமது ஸம்ப்ரதாயங்களில் ஸம்ஸ்க்ருத மொழியின் முக்கியத்துவத்தை நாம் அறிவோம். தமிழும் தெய்வீக மூலம் கொண்ட மொழியானாலும், தெய்வங்களைத் தமிழில் ஆசையுடன் துதித்தாலும், தொன்றுதொட்டு **அனுஷ்டானங்களை ஸம்ஸ்க்ருதத்தின் அடிப்படையில் நம் முன்னோர்கள் செய்திருக்கிறார்கள்**.

ஸம்ஸ்க்ருதத்தில், குறிப்பாக **அனுஷ்டானத்தில் ஒலி/உச்சரிப்பு மிக முக்கியம்** என்பதை நாம் அறிவோம். ஆகவே அனுஷ்டானத்திற்கான ஸங்கல்பம் ஶ்லோகங்கள் முதலியவற்றை **சரியானதொரு லிபியில்** எழுதவோ படிக்கவோ வேண்டும்.

தமிழ் மொழியை எழுதப் போதுமான வரிவடிவங்கள் தமிழ் லிபியில் உள்ளன. ஆனால் **ஸம்ஸ்க்ருதத்தில்** அதிக ஒலிகள் இருப்பதால் அதனை **எழுத அதிக வரிவடிவங்கள் தேவைப்படுகின்றன**. இதற்காகவே பழைய காலத்திலிருந்து க்ரந்த லிபி இருந்து வருகிறது. இக்காலத்திலோ தேவநாகரி ப்ரபலமாக உள்ளது.

தற்சமயம் **தமிழ் லிபியில்** பிற மொழி ஒலிகளைக் குறிக்க ஜ (ஶ) ஷ ஸ ஹ க்ஷ ஸ்ரீ ஆகிய (க்ரந்த) வரிவடிவங்கள் மட்டும் பயன்பாட்டில் உள்ளன. மேலும் தமிழ் **வல்லின வரிவடிவங்கள் க ச ட த ப ஐந்து மட்டுமே** உள்ளன. ஆனால் ஒவ்வொன்றுக்கும் நான்கு நான்காக **ஸம்ஸ்க்ருதத்தில் இருபது வல்லின ஒலிகள் உள்ளன**. அவ்வாறே **ரு லு போன்ற சிறப்பு உயிர் ஒலிகளையும் அனுஸ்வாரம் விஸர்க்கம் என்ற ஒலிகளையும்** குறிக்க தமிழ் லிபியில் **வரிவடிவங்கள் இல்லை**. ஆகவே தமிழ் எழுத்தை மட்டும் கொண்டு ஸம்ஸ்க்ருதத்தைச் சரியாக குறிக்க இயலாது.

குறிப்பாக வல்லின எழுத்துக்களுடன் க$_2$ க$_3$ க$_4$ என்று எண்களைப் பயன்படுத்தும் வழக்கம் பிற்காலத்தில் ஏற்பட்டது. ஆனால் இந்த எண்களைக் கண்டுகொள்ளாமல் தமிழ் முறைப்படி படித்தால் ஒலிகள் மாறிவிடும் வாய்ப்பு அதிகம் உள்ளது. கோ$_3$பால என்பது கோ$_1$பா$_3$ல என்று ஒலிக்கும். பெரும்பாலானோர் இப்படித்தான் செய்கின்றனர்.

ஆகவே ஜ முதலியவற்றைப் போல் **மற்ற ஒலிகளுக்கும் அவைகளது க்ரந்த வரிவடிவத்தையே பயன்படுத்துவது** அர்த்தமுடையதாகிறது. இந்த தமிழ்+க்ரந்தம் கலந்த முறையிலும் நமது கோப்புகளை வெளியிட்டு வருகிறோம்.

க்ரந்தம் அல்லது தேவநாகரி என்ற முழு லிபியைக் கற்பதை விட **இந்த கலந்த முறைக்காக சில வரிவடிவங்களை மட்டும் கற்பது மிகவும் எளிதாகும்**. மனமிருந்தால் மார்க்கம் உண்டு. முடியாது என்று நினைக்கவேண்டியதில்லை.

ஆகவே **இந்த தமிழ்+க்ரந்தம் கலந்த முறையிலோ அல்லது முழு க்ரந்தம் அல்லது தேவநாகரி லிபியைப் பயன்படுத்தியோ ஸம்ஸ்க்ருதத்தை வாசிப்பதே சிறந்தது என்று வலியுறுத்துகிறோம்**. ஆகவே இயன்றவரை அந்த கோப்புகளையே பயன்படுத்தவும். இருப்பினும் பலரின் வேண்டுகோளுக்கிணங்க நடப்பு தமிழ்+234 முறையிலும் கோப்புகளை வெளியிட்டு வருகிறோம்.








ஶ்ரீ-வேத$^{3}$வ்யாஸாய நம:

ஶ்ரீமத்$^{3}$-ஆத்$^{3}$ய-ஶங்கர-ப$^{4}$க$^{3}$வத்பாத$^{3}$-பரம்பராக$^{3}$த-மூலாம்நாய-ஸர்வஜ்ஞ-பீட$^{2}$ம்
ஶ்ரீ-காஞ்சீ-காமகோடி-பீட$^{2}$ம்
ஜக$^{3}$த்$^{3}$கு$^{3}$ரு-ஶ்ரீ-ஶங்கராசார்ய-ஸ்வாமி-ஶ்ரீமட$^{2}$-ஸம்'ஸ்தா$^{2}$நம்

# ॥அக்ஷய-த்ரு'தீயா॥

**வைஶாக$^{2}$-ஶுக்ல-த்ரு'தீயா**

நமது ஸநாதன தர்மத்தில் பாபங்களை போக்கிக்கொள்வதன் மூலமாக கஷ்டங்களிலிருந்து விடுபடுவதற்கும், ஸுகங்களை அடைவதற்கும் பல உபாயங்கள் வேத/புராண/இதிஹாஸங்களில் கூறப்பட்டுள்ளன. அவற்றுள் தானம் மிகவும் சக்தி வாய்ந்த உபாயம் என்று பகவான் கருட புராணத்தில் "தா$^{3}$நேந ஶுலபோ$^{4}$ த$^{4}$ர்ம:" என்று கூறுகிறார்.

அந்த தானமும் சில இடங்களில்/ஸமயங்களில் செய்யும் பொழுது மிக அதிக பலனைக் கொடுக்கக் கூடியது. அவ்வாறான ஒரு ஸமயம் தான் இந்த "அக்ஷய த்ருதீயை". சித்திரை மாதத்தின் அமாவாஸ்யைக்குப் பிறகு வரக்கூடிய (சாந்த்ரமானப்படி, வைஶாக மாஸத்தின்) ஶுக்ல த்ருதீயையே அக்ஷய த்ருதீயை எனப்படும்.

அன்று செய்த தானத்தின் பலனானது என்றும் குறையாமல் இருப்பதால் இந்த பெயர் ஏற்பட்டுள்ளது என்று பவிஷ்ய புராணம் கூறுகிறது—

**யா த்வேஷா குருஶார்தூ3ல வைஶாகே2 மாஸி வை திதி2:|**
**த்ரு’தீயா ஸா(அ)க்ஷயா லோகே கீ3ர்வாணைரபி4நந்தி3தா॥29||**

**யத் கிம்’சித்3 தீ3யதே தா3நம்’ ஸ்வல்பம்’ வா யதி3 வா ப3ஹு|**
**தத் ஸர்வமக்ஷயம்’ ஸ்யாத்3 வை தேநேயமக்ஷயா ஸ்ம்ரு’தா॥31||**
**—ப4விஷ்யமஹாபுராணே ப்ரத2மே ப்3ரஹ்மபர்வணி ஏகவிம்’ஶே அத்4யாயே**

அக்ஷய த்ருதீயை தினத்தில் உபவாஸமிருந்து தானாதிகளைச் செய்தால் மேலும் அதிகமான பலன் உண்டாகும் என்றும் ஆசைப்படக்கூடிய அனைத்தும் கிடைக்குமென்றும் பகவான் பரமேஸ்வரன் பார்வதிக்கு உபதேசித்ததை மத்ஸ்ய புராணம் கூறுகிறது.

**அதா2ந்யாமபி வக்ஷ்யாமி த்ரு’தீயாம்’ ஸர்வகாமதா3ம்|**
**யஸ்யாம்’ த3த்தம்’ ஹுதம்’ ஜப்தம்’ ஸர்வம்’ ப4வதி சாக்ஷயம்||1||**

**வைஶாகே2 ஶுக்லபக்ஷே து த்ரு’தீயா யைருபோஷிதா|**
**அக்ஷயம்’ ப2லமாப்நோதி ஸர்வஸ்ய ஸுக்ரு’தஸ்ய ச||2||**
**—மத்ஸ்யமஹாபுராணே பஞ்சஷஷ்டே அத்4யாயே**

**ஸஹஸ்ரகு3ணிதம்’ தா3நம்’ ப4வேத்3 த3த்தம்’ யுகா3தி3ஷு|**
**வைஶாகே2 ஶுக்லபக்ஷே து த்ரு’தீயாயாம்’ ச பா4மிநி||**

**ஸ்நாத்வா து தர்பயேத்3 ப4க்த்யா திலத3ர்ப4ஜலை: ப்ரியே|**
**ஶ்ராத்3த4ம்’ க்ரு’தம்’ ப4வேத் தேந க3ங்கா3யாம்’ நாத்ர ஸம்’ஶய:||**
**—ஸ்காந்தே3 மஹாபுராணே ஸப்தமே ப்ரபா4ஸக2ண்டே3**

பொதுவாக யுகாதிகளில் தானம் செய்தால் ஆயிரம் மடங்கு பலன் கிடைக்கின்றது. அக்ஷய த்ருதீயை என்பது க்ருதயுகத்தின் தொடக்கம். அன்று தானம் செய்வதால் அனந்த பலனும் அன்று பித்ருக்களுக்கு தர்ப்பணம் செய்வதால் கங்கையில் ஶ்ராத்தம் செய்த பலனும் கிடைப்பதாக ஸ்காந்த புராணமும் பாத்ம புராணமும் கூறுகின்றன.